# தமிழகத்தில் மரைன் ஊர்க்காவல் படைக்கு 1000 இளைஞர்கள் தேர்வு

**ராமநாதபுரம்,செப்.21**

தமிழகத்தில் 13 கடலோர மாவட்டங்களில் உள்ள 42மரைன் போலீஸ் ஸ்டேஷன்களில் பணியாற்ற 1000 மரைன் ஊர்க்காவல் படை இளைஞர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். இதற்கு மீனவர் சமுதாய இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம்.

போக்குவரத்து நெரிசலை ஒழுங்குபடுத்தி, பாதுகாப்பு பணியில் போலீசாருக்கு உதவ உள்ளூர் போலீஸ் ஸ்டேஷன்களில் ஊர்க்காவல் படை என்ற அமைப்பு செயல்படுவது போல் கடலோர கண்காணிப்பு பணிக்காக 'மரைன் ஹோம்கார்டு' பணிக்கு 1000 இளைஞர்கள் தேர்வு செய்யப்படுவர் என சட்டசபை கூட்டத் தொடரில் முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார்.

ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தஞ்சை, நாகை உள்ளிட்ட 13 கடலோர மாவட்டங்களில் உள்ள 42மரைன் போலீஸ் ஸ்டேஷன்களில் இதற்காக இளைஞர்கள் தேர்வு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட ஸ்டேஷன் எல்லைக்கு உட்பட்ட கடற்கரை கிராமத்தை சேர்ந்தபத்தாம் வகுப்பு படித்த மீனவ இளைஞர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். 18 முதல் 30 வயதிற்கு உட்பட்டவராகவும், வழக்கு எதுவும் இல்லாதவராகவும் இருக்க வேண்டும். ஒரு ஸ்டேஷனுக்கு 25 பேருக்கும் மேல் நியமிக்கப்பட உள்ளனர்.

ஏற்கனவே உள்ள ஊர்க்காவல் படையினருக்கு வழங்கப்படுவது போல் சம்பளம் வழங்கப்படும். தகுதியான மீனவ இளைஞர்கள் கடல் மீன் பிடி தொழிலுக்கு சென்றாலும், இந்த பணியில் விரும்பினால் சேரலாம்.

தற்போது இப்படைக்கான தேர்வு பணி நடப்பதால் இளைஞர்கள் அவர்கள் பகுதியில் உள்ள மரைன் போலீஸ் ஸ்டேஷன்களில் விண்ணப்பிக்கலாம், என அதிகாரிகள் தெரிவித்தனர்.